ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீகமலவல்லி நாயகி ஸமேத ஸ்ரீஅழகியமணவாள பரப்ரஹ்மணே நம:




(உறையூர் "நம்நாச்சியார்" கமலவல்லி)

## ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# ஸ்ரீலக்ஷ்மீ தந்த்ரம்

(ஐந்தாவது அத்யாயம் – ஏழாம் பகுதி)
இதற்கான ச்லோகம் மற்றும் பொருள் – தமிழில்

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீஅஹோபிலதாஸன் க. ஸ்ரீதரன்
Email: sridharan_book@yahoo.com

5-79. கரணாநி தசா த்ரீணி ஸூக்ஷ்மாம்சா ஸ்தூல ஸம்பவா:
ஏதஸ் ஸூக்ஷ்ம சரீரம் து விராஜ: பரிகீர்த்திதம்

**பொருள்** – ஸ்தூலத்தில் இருந்து வெளிப்பட்ட பத்து இந்த்ரியங்கள் மற்றும் அந்தகரணம் (10+3=13) ஆகியவை ஸூக்ஷ்ம சரீரத்தை உருவாக்குகின்றன. இந்த ஸூக்ஷ்ம சரீரம் விராஜ எனப்படுகிறது.

5-80. வ்யஷ்ட்ய: ஸூக்ஷ்ம தேஹாச்ச ப்ரதிஜீவம் வியவஸ்திதா:
அபவர்க்கே நிவர்த்தந்தே ஜீவேப்யஸ்தே ஸ்வயோநிஜா:

**பொருள்** - ஒவ்வொரு உயிரிலும் உள்ள ஸூக்ஷ்ம சரீரம் என்பது வெவ்வேறாக உள்ளது. உயிர் பிரியும் நேரத்தில், இந்த ஸூக்ஷ்ம சரீரம் என்பது அந்தந்த ஜீவனில் இருந்து பிரிக்கப்பட்டு விடுகிறது.

5-81. அந்யோந்ய அநுக்ரஹேணைதே த்ரயோவிம்சதி ருத்திதா:
மஹதாத்ய விசேஷாந்தா ஹி அண்டமுத்பாதயந்தி தே

**பொருள்** - மஹத் தொடங்கி விசேஷணம் வரை உள்ள இருபத்துமூன்று தத்துவங்களும் ஒன்றுக்கொன்று உதவியபடி உள்ளன. இதன் மூலம் அண்டம் உற்பத்தி ஆகிறது.

5-82. தத் அண்டம் அபவத் ஏமம் ஸஹஸ்ராம்சு ஸமப்ரபம்
தஸ்மிந் ப்ரஜாபதிர்ஜஜ்ஞே விராட் தேவச்சதுர்முக:

**பொருள்** - அந்த அண்டமானது ஆயிரக்கணக்கான கதிர்களுடன் கூடிய சூரியன் போன்று மிகவும் ஒளியுடன் காணப்படுவதாகும். அதில் இருந்து விராட் என்றும், ப்ரஜாபதி என்றும் கூறப்படும் நான்முகன் தோன்றுகிறான்.

5-83. விராஜச்ச மநுர்ஜஜ்ஞே மநோஸ்தே மாநவா: ஸம்ருதா:
மரீசி ப்ரமுகாஸ்தேப்யோ ஜகத் ஏதத் சராசரம்

**பொருள்** – விராட் புருஷனிடம் இருந்து மனு பிறந்தான். மனு வம்சத்தினர் மாநவாகர் எனப்பட்டனர். இவர்களின் தலைவனாக உள்ள மரீசியிடம் இருந்தே அசையும் பொருள்கள், அசையாப் பொருள்கள் எனப் பலவும் உள்ள இந்த உலகம் உற்பத்தி ஆனது.

5-84. ப்ரகார: அயம் மமோத்யாத்யா லேசதஸ்தே ப்ரதர்சித:
ஸ்வத: சுத்தாபி சித் சக்தி: ஸம்வித அநாதி அபித்யயா

**பொருள் -** இதுவரை எனது நிலைகளின் சிறிய பகுதியைப் பற்றி மட்டுமே உனக்கு (இந்திரன்) நான் கூறி வந்தேன். நான் தூய்மையானவள், ஞானமயமானவள் என்ற போதிலும் ஜீவன்களின் எல்லையற்ற அவித்யை காரணமாக, அவர்களை அறியாமை சூழ்ந்தபடியே உள்ள நிலையில் படைத்து விடுகிறேன் .

5-85. துக்கம் ஜந்ம ஜராத்யுத்தம் தத்ரஸ்தா ப்ரதிபத்யதே
சுத்த விஜ்ஞான ஸம்பந்தாச் சுத்த கர்ம ஸமந்வயாத்
யதா துநோத்யவித்யாம் தாம் ததா ஸ ஆநந்தம் அச்நுதே

**பொருள் -** அவித்யை காரணமாக துக்கம், ஜரா என்னும் வயோதிகம் ஆகியவை ஜீவன்களுக்கு என்னால் உண்டாக்கப்படுகிறது. இத்தகைய நிலைகள் கர்மம் போன்றவற்றால் விலகிவிடுகிறது. அதன் பின்னர் ஜீவனுக்கு அதன் இயல்பான ஆனந்தம் உண்டாகி விடுகிறது.

## ஐந்தாம் அத்யாயம் ஸம்பூர்ணம்